*10*

# ஆவிக்குரிய வளர்ச்சியின் அவசியம்!

## (5:11–6:9அ)

*எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், 5:1-10* வசனப்பகுதியில், "மெல்கிசேதேக்கின் முறைமைப் படியான" ஆசாரியர் என்ற வகையில் இயேசுவைக் குறிப்பிட்டார் (வசனங்கள் 6, 10). அந்த இடத்தில் அவர் சற்றே நிதானித்தார். செயல்விளைவில் அவர், "நான் ஒரு பிரச்சனையைக் கொண்டுள்ளேன். *நீங்கள்* ஒரு பிரச்சனையைக் கொண்டுள்ள காரணத்தினால் நான் ஒரு பிரச்சனையைக் கொண்டுள்ளேன். நான் கூற இருப்பதைப் புரிந்துகொள்ளும் திறன் உடையவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள் என்று நாம் நிச்சயமாயிருப்பதில்லை" என்றே கூறினார் (காண்க வசனம் 11). எழுத்தாளர் இவ்வாறு, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் உள்ள மிகவும் நடைமுறையான பகுதிகளில் ஒன்றை அறிமுகப்படுத்தினார்: இது *ஆவிக்குரிய வளர்ச்சிக்கான* அவசியத்தின் மீதான பகுதியாக உள்ளது. இவ்வசனங்களை நாம் வாசிக்கையில், காலங்கள் அதிகமாக மாறவில்லை என்ற உண்மையினால் நாம் மீண்டுமாக மனம் ஈர்க்கப்படுகிறோம். இன்றைய நாட்களில் இன்னமும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கான மாபெரும் தேவை ஒன்றுள்ளது.

## அது எவ்வாறு *இருந்தது*: அவர்கள் வளரத் தவறியிருந்தனர் (5:11-14)

யாருக்கு இந்த நிருபம் எழுதப்பட்டதோ, அவர்கள் ஆவிக்குரிய வகையில் பச்சிளம் குழந்தைகளாக இருந்தனர் (வசனம் 13) அவர்களுக்கு இன்னமும் குழந்தைக்குரிய உணவே தேவைப்பட்டது (வசனம் 12). வளரத் தவறியவர்களை அடையாளப்படுத்துவதற்கு வழிமுறைகள் பலவற்றை நமது வசனப்பகுதி கருத்தாகத் தெரிவிக்கிறது.

**எவ்வாறு படிப்பது என்பதை அவர்கள் அறியவில்லை (5:11).**

அவர்கள் "கேள்வியில் மந்தமுள்ளவர்களாக" (வசனம் 11) இருந்தனர். "மந்தம்" "dull" என்பது *6:11*ல் "sluggish" "அசதி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தையாக உள்ளது. அவர்கள் சோம்பேறித்தனமாகக் கற்றுக்கொள்பவர்களாக இருந்தனர்; அவர்கள் கற்றுக்கொள்வதற்குத் தேவையான முயற்சியை மேற்கொள்ள விரும்பவில்லை. ஜாக்கிரதையாகக் கவனிப்பதற்கு முயற்சி தேவைப்படுகிறது. மந்தமான வேதாகம வகுப்புகள் அல்லது மந்தமான ஆராதனை ஊழியங்கள் பற்றி மக்கள் முறையிடும்போது, போதிக்கப்பட்டது என்ன என்பதை அவர்கள்

நன்கு கவனியாது இருத்தலே அடிக்கடி பிரச்சனையாக உள்ளது. ஆவிக்குரிய எல்லா விஷயங்களும் அவர்களுக்கு மந்தமாக இருந்தால், பிரச்சனை என்பது அனேகமாக வகுப்புகள் அல்லது ஆராதனை ஊழியங்கள் ஆகியவற்றில் அல்ல, ஆனால் அவர்களிடமே இருக்கிறது.

***எப்படி போதிப்பது என்பதை அவர்கள் அறியவில்லை (5:12ஆ).***

இந்த நிருபத்தில் குறிப்பிடப்பட்டவர்கள், போதிப்பதற்காக திறன் கொண்டிருக்கவில்லை; அவர்கள் தெளிவாய் போதிப்பதில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. நாம் யாவருமே போதகர்களாக இருக்க வேண்டும் (மத்தேயு 28:19, 20). நம்மில் எல்லாருமே வெளிப்படையான போதகர்களாக - அதைச் செய்வது ஒரு திறமையாக உள்ளது (ரோமர் 12:7) - இருக்க வேண்டியதில்லை, ஆனால் நாம் யாவருமே, மற்றவர்களுடன் நமது விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளும் அளவுக்கு வளர வேண்டும்.

***அதிகமாகக் கற்றுக்கொள்ளுதலை அவர்கள் விரும்பவில்லை (5:12ஆ, 13).***

ஆவிக்குரிய வகையில் பச்சளம் குழந்தைகளாக இருந்த இவர்கள், வேதாகமரீதியாக அதிகம் கடினமாயிருந்த பாடக்கருத்துக்களைக் கையாள்வதில் கொஞ்சமே ஆர்வம் கொண்டிருந்தனர் அல்லது ஆர்வம் இல்லாதிருந்தனர். அவர்கள் கற்றுக்கொள்வதை நிறுத்தி இருந்தனர் மற்றும் வேதவசனம் பற்றிய தங்கள் அறிவைப் பக்குவடையச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள மனவிருப்பம் இல்லாதிருந்தனர்.

***தவறானது மற்றும் சரியானதை அவர்களால் கூற முடியவில்லை (5:14).***

சந்தர்ப்பப் பொருளில் எழுத்தாளர், நல்ல போதனை மற்றும் பொல்லாத போதனை ஆகியவற்றிற்கு இடையில் பகுத்தறிதல் பற்றி விசேஷித்த வகையில் அக்கறை கொண்டிருந்தார். குழந்தைகள் எல்லாவற்றையும் தங்கள் வாய்களில் போட்டுக்கொள்ள விரும்புவதைப் போலவே, ஆவிக்குரிய வகையில் பக்குவம் அற்றவர்கள் தங்கள் மனங்களில், கள்ளப்போதகர்கள் எல்லா வகையான தவறையும் இடுவதை அடிக்கடி அனுமதிக்கின்றனர்.

## *அது எவ்வாறு இருக்க வேண்டும்: அவர்கள் ஆவிக்குரிய வகையில் வளர வேண்டும் (6:1-3)*

***அறைகூவல் (6:1, 2)***

எழுத்தாளர் தமது வாசகர்களுக்கு, "கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை" விட்டுக் கடந்து வரும்படி அறைகூவல் விடுத்தார் (வசனம் 1). ASV வேதாகமம் "முதல் கொள்கைகள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. இதை சுவிசேஷத்தின் அஆஇ என்று நாம் நினைக்கலாம். இயேசுவின் பலியைப் பற்றிய வரலாறு மற்றும் அதற்கு நாம் கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசம் ஆகியவற்றின் மூலமாக எவ்வாறு பதில் செயல் செய்கிறோம் என்பவற்றை (மாற்கு 16:15, 16; மத்தேயு 28:18-20) நாம் "முதல் கொள்கைகள்" என்று பொதுவாக நினைக்கிறோம். எபிரெயர் 6:1, 2ல் உள்ள பட்டியல், நாம் "கடினமாக" உள்ளதென்று கருதுகிற தலைப்புகளை உள்ளடக்குகிறது, ஆனால்

*எழுத்தாளர் அவற்றை "தொடக்கநிலை" என்று அழைத்தார். அடிப்படை உபதேசங்களை நாம் மறுகண்ணோட்டமிட அவசியம் இல்லை என்பது அவரது கருத்தாக இருந்தது. தொடக்கநிலைப் பாடக் கருத்துக்களை அவ்வப்போது நமது மனங்களில் நாம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும், ஆனால் அவற்றுடன் நாம் நிறுத்திக் கொள்ளக் கூடாது. அவைகள் அஸ்திபாரக் கருத்துக்களாக உள்ளன; அவற்றின் மீது நாம், வேதாகம அறிவின் சுவர்களைக் கட்டி எழுப்ப வேண்டும்.*

*எழுத்தாளர் தமது வாசகர்களை பக்குவமுள்ளவர்களாகும்படி, வளரும்படி வேண்டிக்கொண்டார். நமது சிந்தனையிலும் நமது செயல்பாடுகளிலும் நாம் பக்குவமடைய வேண்டும் (காண்க 1 கொரிந்தியர் 13:11). இது எங்குள்ள கர்த்தருடைய சபை எதிர்நோக்கும் தேவையாக உள்ளது!*

***உறுதிப்பாடு (6:3)***

*எழுத்தாளர் தமது வாசர்களை வளரும்படி வேண்டிக்கொண்ட பின்பு, அவர்களுடன் தம்மையும் உள்ளடக்கினார். அவர், "தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்வோம்" என்று கூறினார் (வசனம் 3). இதுவே நம் ஒவ்வொருவரின் பொறுப்பாக இருக்கட்டும்!*

## *(அவர்கள் வளரவில்லை என்றால்) இது எவ்வாறு இருந்திருக்கலாம் (6:4-9அ)*

***என்ன நடக்கக் கூடும்***

*6:4-8ல் எழுத்தாளர் தமது வாசகர்களை, முழுமையான விசுவாச விலக்கம் என்ற விளிம்பிற்குக் கூட்டிச்சென்றார். முன்னதாக அவர், கிறிஸ்தவர்கள் விட்டு விலகக் கூடும் (2:1) மற்றும் பிரிந்து போகக்கூடும் (3:12) என்று குறிப்பிட்டார். அவர்கள் மந்தமாகக் கூடும் என்று 5:11ல் அவர் எச்சரித்தார்.[1] விஷயம் இப்படி இருந்தபோது, அவர்கள் பேரழிவை நோக்கி முன்சென்றார். நம்மில் எவரும் ஆவிக்குரிய வகையில் அசைவற்று நிற்பதில்லை. நாம் முன்னோக்கியோ அல்லது பின்னோக்கியோ செல்லுகிறோம். நாம் வளரவில்லை என்றால், நாம் விசுவாச விலக்கத்தின் அபாயத்தில் இருக்கிறோம்!*

***இது யாருக்கு நடக்கக் கூடும்***

*தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் விழுந்துபோக முடியாது என்று சிலர் நினைப்பதால், 4 முதல் 6 வரையுள்ள வசனங்கள் கிறிஸ்தவர்களுக்கு நடைமுறைப்படுவதில்லை என்று அவர்கள் உரிமை கோருகின்றனர். இருப்பினும் அவைகள் கிறிஸ்தவர்களைக் குறிப்பதாகவே இருந்தன. உண்மையில் அவர்கள் தனிச்சிறந்த கிறிஸ்தவர்களாக இருந்தனர். ஒரு காலத்தில் ...*

- *அவர்கள் பிரகாசிப்பிக்கப்பட்டிருந்தனர் (வசனம் 4; காண்க 10:32).*
- *அவர்கள் "பரம ஈவை ருசிபார்த்து" இருந்தனர் (வசனம் 4; காண்க 2:9).*
- *அவர்கள் "பரிசுத்த ஆவியைப்பெற்று" இருந்தனர் (வசனம் 4; காண்க நடபடிகள் 2:38).*
- *அவர்கள் "தேவனுடைய நல்வார்த்தையை ருசிபார்த்து" இருந்தனர் (வசனம் 5; காண்க 2:9).*

* அவர்கள் "இனிவரும் உலகத்தின் பெலன்களை ருசிபார்த்து" இருந்தனர் (வசனம் 5).[2]

இந்த நிருபத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு, இந்தக் கூற்றுக்கள் உண்மையாக இருந்த போதிலும், அவர்கள் இன்னமும் விசுவாசத்தை விட்டு விலகிப்போக முடியும். எழுத்தாளர், "... நன்மையானவைகளும் இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிற தென்று நம்பியிருக்கிறோம்'' என்று கூற முன்னோக்கிச் சென்றார் (வசனம் 9). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "இந்தத் துன்பங்கள் உங்கள் மீது விழும் என்று நான் நினைக்கவில்லை, ஆனால் அது *விழமுடியும்* என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்" (காண்க 1 கொரிந்தியர் 10:12). தேவனுடைய உதவியுடன் நாம் ஆவிக்குரிய முறையில் வளருவோம் என்று தீர்மானிக்க நாம் யாவருக்கும் தேவன் தாமே உதவுவாராக (6:3)!

## போதகருக்குக் குறிப்புகள்

''வளராதிருப்பதன் அபாயங்கள்'' என்பது நமது வசனப்பகுதிக்கான இன்னொரு அணுகுமுறையாக இருக்க முடியும். இந்த அணுகுமுறைக்கான சில குறிப்புகள் பின்வருமாறு.

(1) *ஊக்கம் இழந்தவர்களாகும் அபாயம்* (5:12-14). முன்னிலைப் பெயர்ச்சொல் (''நீங்கள்'') கொண்டு எழுதப்பட்டுள்ள இந்தப் பகுதி, வாசகர்களின் பிரச்சனையினுடைய இருதயம்போன்ற மையப்பகுதியை தாக்கும் தனிப்பட்ட பகுதியாக உள்ளது: அவர்கள் தேவனுடைய வசனத்தைப் புறக்கணித்திருந்தனர், ஆகவே ஆவிக்குரிய முறையில் வளரத் தவறியிருந்தனர்.

(2) *சிறுபிள்ளைகளின் குணம் கொண்டவர்களாக நிலைத்திருக்கும் அபாயம்* (5:12-14). சிறுபிள்ளைகளின் குணம் கொண்டவர்களாகவே இருத்தல் என்பது சபையின் முதன்மைப் பிரச்சனையாக உள்ளது. "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக" (எபேசியர் 4:15; காண்க 2 பேதுரு 3:18).

(3) அறியாமையுள்ளவர்களாக நிலைத்திருக்கும் அபாயம் (5:12-6:3). வாசகர்கள் தேவனுடைய வசனத்தைப்பற்றி அறியாதவர்களாக இருந்தனர் (5:12-14). அவர்கள், மிகவும் முதன்மைக் கொள்கைகள் பற்றிக்கூட அறியாதவர்களாக இருந்தனர் (5:12; 6:1-3).

(4) *கனியற்றவர்களாக இருக்கும் அபாயம்* (6:4-8). ஒரு நிலமானது மழையைப் பெற்று கனிதரலாம் (வசனம் 7). இன்னொரு நிலம், அதே ஆசீர்வாதத்தைப் பெற்று, முள்செடிகளையும் பூண்டுகளையும் மாத்திரமே விளைவிப்பதாக இருக்கலாம் (வசனம் 8). இதே விஷயம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பொறுத்த மட்டிலும்கூட உண்மையாக உள்ளது: அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்ட பின்னரும், கனியற்றவர்களாக இருக்கும் சாத்தியம் நமக்கு உண்டு.

(5) *இழந்துபோகப்படும் அபாயம்* (6:4-8). தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றும், முட்செடிகளையும் பூண்டுகளையும் விளைவிக்கும் நிலமானது தகுதியற்றதாக உள்ளது, அது சபிக்கப்படுவதற்கு அண்மையில் உள்ளது மற்றும்

அது எரிக்கப்படுதல் என்ற முடிவைப் பெறுகிறது (வசனம் 8). நாம் ஆவிக்குரிய முறையில் வளரவில்லை என்றால் என்ன நடக்கக் கூடும் என்பது பற்றிய அச்சுறுத்தும் உருவகமாக இது உள்ளது!

---

குறிப்புகள்

[1]Adapted from Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 299. [2]இது பரலோகத்தைக் குறிப்பதாக இருக்க முடியும், ஆனால் அனேகமாக இது கிறிஸ்தவ யுகத்தையே குறிப்பதாக இருக்கலாம். "இனிவரும் உலகம்" என்பது மேசியாத்துவ யுகத்தைக் குறிக்க யூதர்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு சொற்றொடராக இருந்தது.